**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர், தேதி: 24.08.2023

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தொழில் நுட்ப வணிக காப்பக தொழில் முனைவோர்கள் வெற்றி

Startup TN - தமிழ்நாடு புத்தொழில் திருவிழா - கோவை கொடிசியா கண்காட்சி வளாகத்தில் 19 மற்றும் 20ல் சிறப்பாக நடந்து முடிந்தது. Startup TN முன் முயற்சியான "TANSEED" 5.0 ஆரம்ப நிலையில் உள்ள தொழில் முனைவோருக்கான நிதியுதவி அளிக்கும் திட்டமாகும். இந்த திட்டத்தின் நிதியானது பசுமை தொழில்நுட்பம், கிராமப்புற தாக்கம் மற்றும் பெண்கள் தலைமையிலான தொழில் முனைவோருக்கு ரூ.15 லட்சம் வரை மானியம் மற்றும் 3% பங்கு வழங்குகின்றது, மேலும் பிற துறைகளில் உள்ள தொழில் முனைவோருக்கு ரூ.10 லட்சம் வழங்குகின்றது. இப்புத்தொழில் திருவிழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி உரையுடன் தொடங்கி வைத்தார், மேலும் தமிழக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை மாண்புமிகு அமைச்சர் திரு.தி.மு.அன்பரசன் மற்றும் தமிழக தொழில்துறை மாண்புமிகு அமைச்சர் திரு. T.R.B ராஜா கலந்து கொண்டு தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் திரு.தி.மு.அன்பரசன் அவர்கள் தொழில் நுட்ப வணிக காப்பகத்தின் தொழில் முனைவோர்களான திருமதி.R.சுபத்ரா (நிறுவனர் M/s. PVR Foods), திருமதி ரிஃபானா சாகுல் (நிறுவனர் M/s. Myco Mushroom Hub), திரு.T.விக்னேஷ்வரன் (நிறுவனர், M/s. Nandha InfoTech) மற்றும் திரு.K.உதயகுமார் (நிறுவனர், M/s. Carpro Technologies) ஆகியோர்களுக்கு TANSIM -TANSEED 5.0 திட்டத்தின் கீழ் ரூ.15 லட்சத்திற்கான தேர்வு சான்றிதழ்களை வழங்கினார்.

இத்திட்டத்தின் பயனாளிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்களிடம் தங்கள் புத்தொழில் முயற்சிகள் மற்றும் யோசனைகள் குறித்து **23.08.2023** அன்று கலந்துரையாடினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து கூறினார். இந்நிகழ்ச்சியில் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ஏ.சோமசுந்தரம் அவர்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக காப்பக செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி திரு.A.V.ஞானசம்பந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற தொழில் முனைவோர்கள் இந்த திட்டத்தின் நிதியை தங்களின் தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**